**செய்தி வெளியீடு எண்: 85/2024** **நாள்: 20.11.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் உலகளாவிய நிலைத்தன்மை விருதுகள் 2024-இல் தங்கம் வென்றது**

நவம்பர் 8, 2024 அன்று புது டெல்லியில் உள்ள JW மேரியட் ஏரோசிட்டியில், உலகளாவிய ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை (Global Energy and Environment Foundation - GEEF) ஏற்பாடு செய்த உச்சி மாநாட்டில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மதிப்புமிக்க உலகளாவிய நிலைத்தன்மை விருது 2024-ல் தங்கம் வென்றுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில் இன்று (20.11.2024), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தலைமை ஆலோசகர் டாக்டர் ராஜீவ் கே. ஸ்ரீவஸ்தவா, இந்த விருதினை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு. தி.அர்ச்சுனன், கூடுதல் பொது மேலாளர் திரு. ஹரி பிரசாத் (இயந்திர அமைப்பு), திரு. சரவண குமார் மேலாளர் (சுற்றுச்சூழல்) உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (United National’s Sustainable Development Goals - SDGs) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சிறந்த பங்களிப்பை அளிக்கிறது. குறிப்பாக, நம்பகமான மற்றும் திறமையான நகர்ப்புற போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையிலும், அதே வேளையில் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டும் செயல்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் சுற்றுச்சூழலுக்கு உகந்த பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு மெட்ரோ பயணிகளுக்கும், சென்னை பெருநகர மக்களுக்கும் பாதுகாப்பான மற்றும் விரைவான பயண அனுபவத்தை வழங்குகிறது. மேலும், காற்றின் தரத்தை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் வளங்களை பாதுகாத்தல், சூரிய சக்தியை அதிக அளவில் பயன்படுத்துதல் மற்றும் பசுமை இல்லா வாயு உமிழ்வைக் குறைத்ததன் மூலம் மெட்ரோ கட்டுமானம் மற்றும் செயல்பாடுகளின் போது சுற்றுச்சூழல் பாதிப்பின் தாக்கம் குறைந்துள்ளது.

இந்த அங்கீகாரம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பையும் சுற்றுச்சூழலுக்கு உகந்த நகர்ப்புற போக்குவரத்து தீர்வுகளை முன்னேற்றுவதில் அதன் முயற்சியையும் வலுப்படுத்துகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**